


தெய்வப்புலமை ஔவையார் அருளிச் செய்த

# கல்வி ஒழுக்கம்

மூலமும் உரையும்

.......

சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச் செய்த

# நன்னெறி

உரையுடன்

அமரர் திருமதி.
வேலாயுதம் யோகேஸ்வரி அவர்களின்
முதலாம் ஆண்டு அமரத்துவ அஞ்சலிக்காக,
இந்தப்பிரசுரம்
இலவசமாக வழங்கப்பட்டது.

பிறப்பு 11.03.1951 இறப்பு 03.10.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் பிறந்து பரந்தனில் வாழ்ந்து பின்னர் கொலண்ட், லண்டனில் வாழ்ந்து அமரத்துவமான எம் அன்புக்குரியவருக்கு எமது அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.



கணவன் - K.S. Velautham, LCGI ( London)
பிள்ளைகள்: Nanthini (France), Suganthini (T.A - London), Mahinthan (M.T -London), Vasanthini LLB. Law.(Australia)
மருமக்கள்: Shanmuganathan (France), Mahamenan AJ Food (London), Mugunthan B.E, M.E.M(Australia),
மருமகள்: Jeyamanogary (Rajani, London)
பேரப்பிள்ளைகள்: Suvetha & Nivetha (France), Agshaya & Artuutan (London), Madusha & Mithusha (London), Yagini (Australia),
சகோதரங்கள்: Sivaratnam (London), Yogaratnam (America), Sundereswary (Canada), Jegatheswary (London) Rajeswary (Germany) Thurairatnam (Canada), Pancharatnam (Canada)
மைத்துனர்: Vallipuram Namasivayam (Sri Lanka)
மைத்துனி: Mrs. N. Sathiyabama (Sri Lanka),

**Contact Address: 7 Blacklands Road, Catford, London SE6 3AE, UK, Tel: 0783548583**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் வேலாயுதம் யோகேஸ்வரி
# அவர்களின்
# முதலாம் அமரத்துவ நினைவு அஞ்சலி

ஓடி உருண்டதம்மா உனைப் பிரிந்த ஒரு வருடம்!
வாடி வதங்குகிறோம்!
உயிரூட்டி, உயிருக்குள் உரமூட்டி
உருவாக்கி, எமை உயிர் வாழ்வித்தாய்!
பயிராக்கி, எம் பாதைவிட்டு மறைந்தாய்!
தயிராகி உறவுகள் தரம் மாறிப் போயினும்
தனை மறந்த உறவான நீயே!
அம்மா எம் தாயே!!!
பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
வாழ்வின் வழி காட்டியாய்
வாழ்ந்த எம் குல விளக்கே
ஆண்டு ஒன்று ஆனாலும்
நெஞ்சமதில் என்றும்
நீங்காத நினைவோடு

**குடும்பத்தினர்**

03-10-2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# கல்வி ஒழுக்கம்
# மூலமும் உரையும்

**1. அஞ்சு வயதி லாதியை யோது.**
இதன் பொருள்: ஆதியை - கடவுளை, அஞ்சு வயதில் ஐந்தாம்மாண்டில், ஓது - நீ ஓதுதல்செய் என்றவாறு. (1)

**2. ஆதியை ஓத அறிவுண் டாமே.**
இ - ள்: ஆதியை - கடவுளை முன்னிட்டு, ஓத-ஓதுதல் செய்ய, அறிவுண்டாம் - அறிவுதோன்றும் எ - று ஏகாரம் - ஈற்றசை

**3. இனியது கொடுத்து எழுத்தைத் தானறி.**
இ - ள்: இனியது கொடுத்து - இனிய பொருள் முதலியவற்றை (ஆசானுக்குக்) கொடுத்து, எழுத்தை - அஷரலஷணம் முதலிய வித்தைகளை, அறி - நீ கற்றுக்கொள் எ - று. தான் - அசை

**4. ஈட்டிய நற்பொரு ளெழுத்தே யாகும்**
இ - ள்: ஈட்டிய - ஒருவன் சம்பாதித்த, நற்பொருள் - நல்லபொருளாவது, எழுத்து ஆகும் - கல்விப் பொருளாகும் எ - று, ஏகாரம் - அசை

**5. உடைமை யென்பது கல்வி யுடைமை**
இ - ள்: உடைமை என்பது - ஒருவனுக்குப் பொருள் என்று சொல்லப்படுவது, கல்வி உடைமை கல்வி பொருளேயாம் எ - று

**6. ஊமை யென்பவ ரோதா தவரே**
இ - ள்: ஊமை என்பவர் - ஊமையென்று சொல்லப்படுவர், ஓதாதவர் - நல்ல நூல்களை வாசியாதவர் எ- று ஏகாரம் - ஈற்றசை.

**7. எழுதப் படுவ தெழுத்தே யாகும்.**
இ - ள்: எழுதப்படுவது - எழுதுதல் செய்யப்படுவது எழுத்தே ஆகும் - அவசரங்களேயாகும் எ - று, ஏகாரம் அசை.

**8. ஏழை யென்பவ ரெழுத்தறி யாதவர்.**
இ - ள்: ஏழை என்பவர் - அறிவிலாரென்பவர், எழுத்தறியாதவர் எ - று

**9. ஐய மேற்கினு மறிவ தெழுத்தே**
இ - ள் ஐயம் ஏற்கினும் - பிச்சையெடுத்தாலும் அறிவது - தெரியப்படுவது, எழுத்து - எழுத்தாகும். எ - று ஏகாரம் - அசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. ஒருபொழு தாயினு மோதி நன்கறி.**
இ - ள்: ஒருபொழுது - ஒருகாலம், ஆயினும் - ஆனாலும் ஓதி நன்கு அறி - நீ அறிவுநூல்களை வாசித்து நன்றாயறிந்து கொள். எ - று.

**11. ஓத லுடைமை வேத வித்தை.**
இ - ள்: வேத வித்தை - இறைவனாலருளிச் செய்யப்பட்ட வேதம் முதலாகிய வித்தைகளே, ஓதலுடைமை - ஓதுதற்குரியனவாம். எ - று.

**12. ஔவியம் பேசா ராமெழுத் தறிந்தோர்.**
இ - ள்: ஔவியம் - பொறாமைச் சொற்களை, எழுத்து அறிந்தோர் - கல்விகற்றறிந்தவர் பேசார் - பேசார் எ - று ஆம் - ஆசை

**13. கண்ணுடை யவர்கள் கற்றவர் தாமே.**
இ -ள்: கண்ணுடையவர்கள் - கண்பொருந்தியவர்கள், கற்றவர் தாம் - அறிவுநூல்களை வாசித்தவர்கள் ஆகும். ஏ- று ஏகாரம் - ஈற்றிசை.

**14. காவல ரெனினுங் கணக்கை யோர்ந்தறி.**
இ - ள்: காவலரெனினும் - அரசர்களானாலும். கணக்கை - எண்ணையு மெழுத்தையும், ஓர் அறிந்து அறி - நீ நன்றாகக் கற்றறி எ- று காவலனெனினும் என்றும் சில பிரதிகளிலிருக்கிறது.

**15. கிடையா உடைமை கல்வி யுடைமை.**
இ - ள்: கிடையா உடைமை - கிடைத்தற்கரிய பொருள், கல்வி உடைமை - கல்விபொருளேயாம் எ - று.

**16. கீர்த்தியும் பெருமையுங் கிடைப்பது கல்வி.**
இ - ள் கீர்த்தியும் பெருமையும் - புகழையும் மேன்மையும், கிடைப்பது - அடையச் செய்வது, கல்வி - கல்விப் பொருளேயாம் எ - று.

**17. குறைவறக் கற்றவன் கோடியி லொருவன்.**
இ - ள்: குறைவறக் கற்றவன் - நன்றாகக் கற்றவன், கோடியில் ஒருவன் - கோடிபேருள் ஒருவனாகும் எ - று.

**18. கூர்மை யென்பது குன்றாக் கல்வி.**
இ - ள்: கூர்மை என்பது - அறிவு என்று சொல்லப்படுவது, குன்றாக்கல்வி - குறையாத கல்வியுடைமையேயாம். எ - று.

**19. கெடுப்பினுங் கல்வி கேடு படாது.**
இ - ள்: கெடுப்பினும் - பிறராற் கெடுக்கப்படினும், கல்வி கேடுபடாது - கல்விப்பொருள் அழியாது எ - று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**20. கேண்மை யுடைமை தாழ்விலாக் கல்வி.**
இ - ள்: கேண்மையுடைமை - ஒருவனுக்குச் சினேகமுடைமை, தாழ்விலாக்கல்வி - குறையாத கல்விப்பொருளை யுடையனாயிருத்தலாம் எ - று.

**21. கைப்பொருளென்பது கசடறு கல்வி.**
இ - ள்: கைப்பொருள் என்பது - கையிலுள்ள பொருளென்று சொல்லப்படுவது, கசடற கல்வி - குற்றந்தீரக் கற்றலாகும் - எ- று.

**22. கொற்றவன் றன்னிலும் கற்றவ னுயர்ந்தவன்.**
ஆ - ள்: கொற்றவன் தன்னிலும் - அரசனிலும், கற்றவனுயர்ந்தவன் - கல்விகற்றவன் மேம்பட்டவன் எ - று.

**23. கோதறு கல்வி குவலயந் தருமே.**
இ - ள்: கோதறு கல்வி - குற்றந்தீரக் கற்ற கல்வி யானது, குவலயந்தரும் - பூமியைத் தரும் எ - று. ஏகாரம் - ஈற்றசை.

**24. சகல கலைக்கும் தலைமை யெழுத்தே.**
இ - ள்: சகல கலைக்கும் - சகல கலைகளுக்கும், தலைமை - முதன்மை, எழுத்து - அட்சரம் எ - று ஏகாரம் - ஈற்றசை.

**25. சாத்திரங் கற்றவன் றன்னை யறிந்தவன்.**
இ - ள்: சாத்திரங் கற்றவன் - வேதமுதலாகிய பதிநூல்களைக் கற்றவன், தன்னையறிந்தவன் - தன்னைத் தெரிந்தவனாகும் எ- று.

**26. சிறுமையிற் கல்வி சிலையி லெழுத்தே.**
இ - ள்: சிறுமையிற் கல்வி - சிறுவயதிற் கல்வியுடையனாதல், சிலையில் எழுத்து - கல்லில் எழுதிய எழுத்துப்போலாகும் எ- று ஏகாரம் - ஈற்றசை.

**27. சீரிய தமிழைத் தெளிய வோது.**
இ- ள்: சீரிய தமிழை - நல்ல தமிழை, தெளிய வோது - நன்றாக நீ கற்றறி எ- று.

**28. சுற்ற மென்பது துகளறு கல்வி.**
இ - ள்: சுற்ற மென்பது - இனமென்று சொல்லப்படுவது, துகளறு கல்வி - குற்றந்தீர்ந்த கல்வியுடையனாதல் எ- று.

**29. சூக்கமுந் தூலமுந் தோன்றக் கற்றறி.**
இ- ள்: சூக்கமும் - ஞானமும், தூலமும் - கிரியையும், தோன்றக் கற்றறி - தெரிய நீ கற்றறி எ - று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**30. சென்றிட மெல்லாம் சிறப்பே கல்வி.**

இ - ள்: சென்றிட மெல்லாம் - போனவிடமெல்லாம், சிறப்பே கல்வி - சிறப்பைத்தருவது கல்வி எ - று.

**31. சேயன் என்பவன் தீங்கறக் கற்றவன்.**

இ - ள்: சேயன் என்பவன் - சேயன் என்று சொல்லப்படுவன், தீங்கறக் கற்றவன் - குற்றந்தீரக் கற்றவன் எ- று.

**32. சைகையுஞ் சமர்த்துந் தந்திடுங் கல்வி.**

இ -ள்: சைகையும் - பழக்கத்தையும், சமர்த்தும் - திறமையையும், கல்வி தந்திடும் - கல்விப்பொருள் (ஒருவனுக்குக்) கொடுக்கும் எ - று.

**33. சொல்லும் பொருளுந் தோன்றக் கற்றறி.**

இ - ள்: சொல்லும் பொருளும் - சொல்லையும் பொருளையும், தோன்ற - தெரிய, கற்றறி - நீ படித்தறி எ - று.

**34. சோம்பரென்பவர் சொல்லெழுத் தறியார்.**

இ - ள் : சோம்பரென்பவர் - சோம்பலுடையவரென்பவர், சொல்லெழுத்தறியார் - சொல்லப்பட்ட எழுத்தை அறியாதவர் எ - று.

**35. தகுமெழுத் தறிந்தவன் தலைவ னாவன்.**

இ - ள் : தகுமெழுத்து - தகுதியாகிய எழுத்தை, அறிந்தவன் - தெரிந்தவன், தலைவன் ஆவன் - குருவாகுவான் எ - று.

**36. தான் கற்றவற்றைச் சபைதனி லோது.**

இ - ள்: தான் கற்றவற்றை - தான் கற்ற நூற் பொருள்களை, சபைதனில் ஓது - கற்றோரிருக்கும் சபையின்கண்ணே நீ ஓதுதல் செய் எ - று.

**37. திருந்த வோதத் திறமுண் டாமே.**

இ - ள்: திருந்த - நன்றாக , ஓத - படிக்க, திறமுண்டாம் - சாமர்த்திய முண்டாம் எ - று, ஏகாரம் ஈற்றசை.

**38. தீரக் கற்றவன் தேசிக னாவன்.**

இ - ள்: தீரக் கற்றவன் - நன்றாகக் கற்றவன், தேசிக னாவன் - குரு ஆகுவன் எ - று.

**39. துறவோ ரென்பவர் துரிசறக் கற்றோர்**

இ - ள்: துறவோரென்பவர் - துறவோர் என்று சொல்லப்படுபவர், துரிசறக்கற்றோர் - குற்றம் தீரக் கற்றவர் ஆவர். எ - று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**40. தூர்த்த ரென்பவர் சொல்லெழுத் தறியார்.**
இ - ன்: தூர்த்தரென்பவர் - துட்டர் என்பவர், சொல்லெழுத்தறியார் - சொல்லையுமெழுத்தையு மறியாதவர் எ - று.

**41. தெளிய வோதத் திறமுண் டாமே.**
இ - ள்: தெளிய வோத - நன்றாகக் கற்க . திறமுண்டாம் - சாமர்த்தியமுண்டாம் எ - று.

**42. தேசமும் நாடும் திருந்த வோது.**
இ - ள்: தேசமும் - தேசங்களையும், நாடும் - நாட்டையும், திருந்தவோது - திருந்தும்படி நீ கல் எ - று.

**43. தைக்கக் கற்றவன் சமர்த்தனாவன்.**
இ - ள்: தைக்க - மனம் அழுத்த, கற்றவன், படித்தவன், சமர்த்தனாவன் - கெட்டிக்காரனாவன் எ - று.

**44. தொன்னூல் முழுதுந் தோன்றக் கற்றறி.**
இ - ள்: தொன்னூல் முழுதும் - பழைய நூல் முழுதையும், தோன்ற - தெரிய, கற்றறி நீ கற்றறிந்துகொள் எ - று.

**45. தோழனாவது சோர்விலாக் கல்வி.**
இ - ள்: தோழனாவது சினேகனாவது, சோர்விலாக் கல்வி - சோர்ச்சியற்ற கல்வியேயாம் எ - று.

**46. நற்பொருள் கொடுத்து நன்றா யோது.**
இ - ள்: நற்பொருள் கொடுத்து - நல்ல பொருளைக் கொடுத்து, நன்றாய் ஓது - நன்றாக நீ ஓதுதல்செய் எ - று.

**47. நானில முழுதும் நயந்தருங் கல்வி.**
இ - ள். நானில முழுதும் - நான்குவகையான பூமி முழுவதிலும், நயந்தரும் - நயத்தைத் தருவது, கல்வி - கல்வியேயாம்.எ - று.

**48. நீசரித் தாயினுங் கற்பது நிலையே.**
இ - ள் : நீ சரித்தாயினும் - நீ பற்பலவிடங்கட்குச் சென்றாயினும், கற்பதுநிலை - கற்றுக்கொள்வது நிலையாகும் எ - று, ஏகாரம் - ஈற்றசை.

**49. நுண்பொருள் கொடுத்து நூல்பலதையுமறி.**
இ - ள்: நுண்பொருள் கொடுத்து - நுண்ணியபொருள்களை (ஆசிரியனுக்குக்) கொடுத்து, நூல்பலதையுமறி - நீ பல நூல்களையுங் கற்றுக்கொள் எ - று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**50. நூறாண் டாயினங் கல்வியை நோக்கு.**

இ - ள்: நூறாண்டாயினும் - நூறு வயதானாலும் கல்வியை நோக்கு - நீ கல்வியை விரும்பு எ - று.

**51. நெடுங்கட லோடினும் நிலையே கல்வி.**

இ - ள்: நெடுங்கடல் ஓடினும் - கரையெடுத்த கடலில் ஓடிப்போனாலும், கல்வி நிரை - கல்வி நிலையேயாகும் எ - று.

**52. நேராக் கல்வி நிலையா காதே.**

இ - ள்: நேர் ஆக் கல்வி - உண்மையாய்க் கற்காத கல்வி நிலையாகாது - நிலையாகமாட்டாது எ - று. மனம் உடன்பட்டுக் கற்காத கல்வி என்றலும் ஒருபொருள்.

**53. நைய வருகினும் நொய்ய நன்கறி.**

இ - ள: நைய வருகினும் - மெலியவருகினும், நொய்ய நன்கறி - நீ இலேசாக நல்லாய்க் கற்றுக் கொள் எ - று.

**54. நொந்தறி யாதவர் செந்தமிழ் கற்றோர்.**

இ - ள்: நொந்து அறியாதவர் - வருந்தி அறியாதவர், செந்தமிழ் கற்றோர் - இயற்றமிழைக் கற்றவர்கள் எ - று.

**55. நோகா துண்பவர் நுண்பொருள் அறிந்தோர்.**

இ - ள்: நுண்பொருள் அறிந்தோர் - நுட்பமான கருத்தை அறிந்தவர், நோகாதுண்பவர் - வருத்தமுறாது சீவிப்பவராவர் எ - று.

**56. பலகலை கற்றவர் பகையைக் கைவிடு.**

இ - ள்: பலநூல்களைக் கற்றவர்களுடைய, பகையை - விரோதத்தை, கைவிடு - நீக்கிவிடு எ - று.

**57. பாவலர் என்பவர் பழுதறக் கற்றோர்.**

இ - ள்: பாவலர் என்பவர் - பாக்களில் வல்லவர் என்று சொல்லப்படுவர், பழுதறக்கற்றோர் - குற்றந்தீரக் கற்றவர் ஆவர் எ - று.

**58. பிழையறக் கற்றவர் பெரியவர் தாமே.**

இ - ள்: பிழையறக் கற்றவர் - குற்றந்தீரக் கற்றவர், பெரியவர் தாமே - பெரியவராகும் எ - று தாம் ஏ அசைகள்.

**59. பீடுஞ் செல்வமும் பெறந்தருங் கல்வி.**

இ - ள் பீடும் - பெருமையும், செல்வமும் -பாக்கியமும், பெறந்தரும் கல்வி - பெறும்படி தருவது கல்வியேயாம் எ - று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**60. புரையறக் கற்றவர் புவியாள் பவரே.**
இ - ள்: புவியாள்பவர் - பூமியைப் பரிபாலனஞ் செய்வோர், புரையறக் கற்றவர் - குற்றந்தீரக் கற்றவராவர் எ - று ஏகாரம் - இற்றசை.

**61. பூமியிற் செல்வம் புகழ்பெறுங் கல்வி.**
இ - ள்: பூமியில் செல்வம் - நிலவுலகிலுள்ள செல்வமாவது, புகழ் பெறுங் கல்வி - கீர்த்தியைத் தருங் கல்வியேயாம் எ - று.

**62. பெருமை பெறுவது பேசருங் கல்வி.**
இ - ள்: பெருமை பெறுவது - மேன்மையைத் தருவது, பேசரும் கல்வி - சொல்லுதற்கரிய கல்வியேயாம் எ - று.

**63. பேதை யென்பவர் பெருநூ லறியார்.**
இ - ள்: பேதை என்பவர் - அறிவிலா ரென்பவர், பெருநூல் அறியார் - பெரிய நூல்களை அறியாதவர் ஆவர். எ - று.

**64. பையப் பையப் படித்தே யொழுகு.**
இ - ள்: பையப் பையப் - மெல்ல மெல்ல, படித்து ஒழுகு, - நீ கற்று நட எ - று. ஏகாரம் - அசை.

**65. பொருள்மிகக் கொடுத்து போதக் கற்றறி.**
இ- ள்: பொருள் மிகக் கொடுத்து - ஆசானுக்குப் பொருளை மிகுதியாகக் கொடுத்து, போத - நிரம்ப, கற்றறி - நீ கற்றறிந்துகொள் எ - று.

**66. போதக் கற்றவன் புண்ணியம் செய்தவன்.**
இ - ள்: போதக் கற்றவன் - நிரம்பக் கல்வி கற்றவன், புண்ணியஞ் செய்தவன் - தருமஞ் செய்தவனாவான் எ - று. போதங்கற்றவன் - என்று சில பிரதிகளிற் காணப்படுகின்றது, போதம் - ஞானம்.

**67. மன்ன ராயினு மறைகளை யோது.**
இ - ள்: மன்னர் ஆயினும் - அரசர்களாயினும், மறைகளையோது - வேதங்களையோதுதல் செய்ய வேண்டும். எ - று.

**68. மாசறக் கற்றவர் மாநில மாள்வார்.**
இ- ள்: மாசறக் கற்றவர் குற்றம் தீரக் கற்றவர், மாநிலம் ஆள்வார் - பெரிய பூமியை ஆள்வார் எ - று.

**69. மிகப் பெரும் செல்வம் விளைத்திடுங் கல்வி.**
இ - ள்: கல்வி - கல்வியானது, மிகப் பெருஞ்செல்வம் - மிகப்பெரிதாகிய செல்வத்தை, விளைத்திடும் - உண்டாக்கும் எ - று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**70. மீசுரக் கொடுத்து வித்தையைக் கற்றறி.**
இ - ள்: வித்தையை - வித்தைகளை, மீசுரக் கொடுத்து - அதிகமாகப் பொருளை (ஆசிரியனுக்குக்) கொடுத்து, கற்றறி - நீ படித்தறி எ - று.

**71. முத்தமிழ் தனக்கு மூப்பு மில்லை.**
இ - ள்: முத்தமிழ் தனக்கு - இயலிசை நாடகமென்னும் மூன்று தமிழைக் கற்றற்கு, மூப்புமில்லை - முழுமையென்பது இல்லை எ - று.

**72. மூதறி வுயர்த்துந் தீதிலாக் கல்வி.**
இ - ள்: தீதிலாக்கல்வி - நற்கல்வி, மூதறிவுயர்த்தும் - பேரறிவிற் றலையுறச் செய்யும் எ - று.

**73. மெல்லிய ரெனினும் வேண்டுவ தெழுத்தே.**
இ - ள்: எழுத்து - கல்வி, மெல்லியரெனினும் - பெண்களாயினும், வேண்டுவது - விரும்புவதாகும் எ - று.

**74. மேலோர் என்ன வித்தையைக் கற்றறி.**
இ - ள்: மேலோர் என்ன - பெரியோரென்று சொல்லும்படி, வித்தையைக் கற்றறி - நீ வித்தைகளைக் கற்றறிந்துகொள். எ - று.

**75. மையறு கல்வியார் மாநில மாள்வார்.**
இ - ள்: மையறுகல்வியார் - மயக்கம்நீங்கிய கல்வியையுடையார், மாநிலம் ஆள்வார் - பூமியை ஆள்பவராவர் இ - று.

**76. மொழிவ தகார முதலெழுத் தாமே.**
இ - ள்: மொழிவது - சொல்லப்படுவது, அகரமுதலெழுத்தாம், - அகரம் முதலாகிய எழுத்துக்களாம் எ - று.

**77. மோக விகாரர் முன்னூல் பாரார்.**
இ - ள்: மோகவிகாரர் - மயக்கம்பொருந்திய வேறுபட்ட குணமுடையோர், முன்னூல் பாரார் - பழையநூல்களைப் பார்க்கமாட்டார் எ - று.

**78. வஞ்சக மோதார் நெஞ்சுறக் கற்றோர்.**
இ - ள்: நெஞ்சுற கற்றோர் - மனமமையக் கற்றறிந்தவர், வஞ்சக மோதார் - கபடவார்த்தைகளைப் பேசமாட்டார். எ - று.

**79. வாட்டந் தராது மறவாக் கல்வி.**
இ - ள்: மறவாக்கல்வி - மறவாத கல்வியுடைமை, வாட்டந்தராது - சோர்வு தரமாட்டாது எ - று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. வித்தைகல் லாதவர் வெறியர் ஆவர்.
இ - ள்: வித்தை கல்லாதவர் - கல்வியைக் கற்காதவர் வெறியர் ஆவர் - பித்தவராவர் எ - று.

81. வீரியம் பேசார் வித்தை யறிந்தோர்.
இ - ள்: வித்தை அறிந்தோர் - வித்தைகளையறிந்தவர், வீரியம் பேசார் - வீரம் பேசமாட்டார் எ - று.

82. வெண்பா முதலாய் விளங்க வோது.
இ - ள்: வெண்பா முதலாய் - வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா முதலாகிய பாவினங்களை, விளங்க ஓது - நீ விளங்கும்படி ஓதுதல் செய் எ - று.

83. வையக மெல்லாம் வாழ்த்தவே ஓது.
இ - ள்: வையகம் எல்லாம் பூமியிலுள்ளார் யாவரும், வாழ்த்த ஓது - வாழ்த்துதல் செய்ய நீ ஓதுதல் செய் எ - று. ஏகாரம்.

84. வௌவிப் படிக்க வாழ்வுண்டாமே.
இ - ள்: வௌவிப் படிக்க - நூல்களை மனதில் ஊன்றிக்கற்க, வாழ்வுண்டாம் - நித்தியானந்தப் பெருவாழ் வுண்டாகும் எ - று. ஏகாரம் - ஈற்றசை.

**கல்வி ஒழுக்கம் மூலமும் உரையும்**
**முற்றுப்பெற்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னெறி

## மூலமும் உரையும்

## கடவுள் வாழ்த்து

மின்னெறி சடாமுடி விநாயக னடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே

**(பதவுரை):** மின் எறி - மின்னல் போலும் ஒளியை வீசுகின்ற சடாமுடி - சடைமுடியையுடைய, விநாயகன் அடிதொழ நன்னெறி வெண்பா நாற்பதும் வரும் - நன்னெறி என்னும் நூலின் நாற்பது வெண்பாவும் வரும்.

**ஏ - ஈற்றசை**

(இதன் கருத்து) விநாயகக் கடவுளை வணங்குதலால் நன்னெறி என்னும் நூல் இடையூறின்றி இனிது முடியும் என்பதாம்.

*1.* *என்று முகமன் இயம்பா தவர் கண்ணுஞ்*
*சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர் - துன்றுசுவை*
*பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ*
*நாவிற் குதவும் நயந்து.*

ப-ரை :பூவின் பொலிகுழலாய் - பூவினால் விளங்குகின்ற கூந்தலையுடையவளே, பூங்கை - அழகிய கையானது. புகழவோ - தன்னைப் புகழ்தல் கருதியோ, நாவிற்கு - நாவினுக்கு, துன்றுசுவை - மிக்க சுவையுள்ள உணவினை, நயந்துதவும் - விரும்பிக் கொடுக்கும். (புகழ் அன்று: அதுபோல) தீது அற்றோர் - குற்றமற்றவராகிய பெரியோர், என்றும் முகமன் இயம்பாதவர் கண்ணும் யாதொரு நாளிலும் (தமக்கு) உபசார வார்த்தைகளைச் சொல்லாதவிடத்திலும், சென்று பொருள் கொடுப்பர் - தாமே சென்று (அவர்க்கு வேண்டும்) பொருளைக் கொடுப்பர்.

பெரியோர் தமக்கு உபசாரஞ் சொல்லாதவரிடத்தும் தாமே சென்று அவர்க்கு வேண்டும் பொருளை வழங்குவர்.
எ - ம்

*2.* *மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்*
*பேசுற்ற இன்சொல் பிறிதென்க - ஈசற்கு*
*நல்லோன் எறிசிலையோ நன்னுதலாய் ஒண்கருப்பு*
*வில்லோன் மலரோ விருப்பு.*

ப - ரை: நல்நுதலால் - நல்ல நெற்றியை உடையவளே, மாசுஅற்ற நெஞ்சுஉடையார் வன்சொல் இனிது - குற்றமற்ற மனத்தையுடையவரது கடுஞ்சொல்லும் இனியதாகும் ஏனையவர் பேசுற்ற இன்சொல் பிறிது என்க - குற்றம் பொருந்திய மனத்தையுடையவராகிய) பிறர் சொல்லிய இன்சொல்லும் கொடியதாகும் என்று அறிவாயாக, ஈசற்கு - சிவபெருமானுக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லோன் எறிசிலையோ - நற்குணமுடையவராகிய சாக்கிய நாயனார் ( அன்போடு) எறிந்தகல்லோ, ஒண்கருப்பு வில்லோன் மலரோ - ஒள்ளிய கரும்பு வில்லையுடைய மன்மதன் (அன்பின்றி) எறிந்த பூவோ, விருப்பு - விருப்பமாயிற்று.

மன நன்மையுடையோருடைய கடுஞ்சொல்லும் இன்பம் விளைக்கும். மன நன்மையில்லாதவருடைய இன்சொல்லும் துன்பம் விளைவிக்கும். சிவபெருமான் சாக்கியர்க்கு அருள் செய்தார். மன்மதனை எரித்தார்.

*3. தங்கட் குதவிலர்கைத் தாமொன்று கொள்ளினவர்*
*தங்கட் குரியராற் றாங்கொள்க - தங்கநெடுங்*
*குன்றினாற் செய்தனைய கொங்கையாய்! ஆவின்பால்*
*கன்றினாற் கொள்ப கறந்து.*

ப - ரை: நெடும் தங்கக் குன்றினால் செய்து அனைய கொங்கையாய் - நெடிய பொன்மலையினாலே செய்தாற் போன்ற தனங்களையுடையவளே, ஆவின்பால் கன்றினால் கறந்து கொள்ப-(தங்களுக்கு கொடாத) பசுவினுடையபாலை (அப்பசுவுக்குரிய கன்றைக் கொண்டு கறந்துகொள்வார்கள். (அதுபோல) தங்கட்கு உதவிலர்கை - தங்களுக்கு உதவாதவர்களுடைய கையினின்றும், தாம் ஒன்று கொள்ளின் - தாங்கள் ஒரு பொருளைக் கொள்ள வேண்டினால், அவர் தங்கட்கு உரியவரால் தாம் கொள்க அவர்களுக்கு உரியவராலே (அப்பொருளைத்) தாங்கள் கொள்ளக்கடவார்கள். தமக்கு உதவாதவரிடத்தில் ஒரு பொருள் பெறவேண்டின். அதனை அவருக்கு உரியவரைக்கொண்டு பெற வேண்டும். எனப்படும்.

*4. பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு*
*பிறர்க்குதவி யாக்குபவர் பேறாம் - பிறர்க்குதவி*
*செய்யாக் கருங்கடனீர் சென்று புயல்முகந்து*
*பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு*

ப - ரை: பிறர்க்கு உதவி செய்யார் - பிறருக்கு உபகாரஞ் செய்யாத, கருங்கடல் நீர் - கரிய கடலின் நீரை, புயல் சென்று முகந்து - மேகமானது போய் மொண்டு வந்து, பிறர்க்குப் பெய்யாக் கொடுக்கும் - பிறருக்குப் பெய்து கொடுக்கும் (அதுபோல) பிறருக்கு உதவி செய்யார் பெருஞ் செல்வம் - பிறர்க்கு உபகாரஞ் செய்யாதவருடைய பெரிய செல்வமானது வேறு - பிறிதேயாயினும், பிறர்க்கு உதவி ஆக்குபவர் பேறு ஆம் - பிறருக்கு உபகாரஞ் செய்பவருடைய செல்வமாகும்.
உலோபிகளின் பொருள் அதனையடுத்து ஈவோரின் பொருளாகவே கொள்ளப்படும். எ - ம்.

*5. நீக்கமறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்*
*நோக்கினவர் பெருமை நொய்தாகும் பூக்குழலாய்!*
*நெல்லின் உமி சிறிது நீங்கிப் பழைமைபோற்*
*புல்லினும் திண்மை நிலை போம்.*

ப - ரை: பூக்குழலாய் - பூக்களைமுடித்த கூந்தலையுடையவளே, நெல்லின் உமி சிறிது நீங்கி - நெல்லினின்றும் உமியானது சிறிதுநீங்கி, பழமைபோல் புல்லினும் - முன்போலவே கூடினாலும், திண்மை நிலைபோம் - (முளைத்தற்கேற்ற) வலிமையின் நிலைபோய்விடும்: (அதுபோல) நீக்கம் அறும் இருவர் பிரிந்து (முன்போலவே) கூடினாலும், நோக்கின் அவர் பெருமை அற்பமாகும்.

இடையே பகையாற் பிரிந்துகூடும் நட்பு முன்போல் உறுதியுடையதாகாது எ - ம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. *காதன் மனையாளுங் காதலனும் மாறின்றித்*
*தீதி லொருகருமஞ் செய்பவே - ஓதுகலை*
*எண்ணிரண்டு மொன்றுமதி என்முகத்தாய் நோக்கறான்*
*கண்ணிரண்டு மொன்றையே காண்.*

ப - ரை: ஓது - புகழ்ந்து சொல்லப்படுகின்ற எண்ணிரண்டு கலையும் ஒன்றும் - பதினாறு கலைகளும் பொருந்திய, மதிஎன்முகத்தாய் - சந்திரன் என்று சொல்லப்படும் முகத்தையுடையவளே! கண் இரண்டும் - இரண்டு கண்களும், நோக்கில் - பார்த்தல், ஒன்றையே - ஒரு பொருளையேயாம் (அதுபோல) காதல் மனையாளும் காதலனும் - அன்புடைய மனைவியும் கணவனும், மாறு இன்றித் தீது இல் ஒருகருமமே செய்ப (தம்முள்ளே) மாறுபாடில்லாமல் (ஒத்துக்) குற்றமில்லாத ஒரு கருமத்தையே செய்வர்.

தான் - அசை. காண் - முன்னிலையசை
கணவனும் மனைவியும்ஒத்துச் செய்யும் அறமே நிறைவேறும். எ - ம்

7. *கடலே யனையம்யாங் கல்வியா லென்னும்*
*அடலே றனையசெருக் காழ்த்தி - விடலே*
*முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்*
*பனிக்கடலும் உண்ணப்படும்*

ப - ரை: முழங்கும் பனிக்கடலும் - ஒலிக்கின்ற குளிர்ச்சி பொருந்திய கடலும், முனிக்கு அரசு கையால் - முனிவர்களுக்குத் தலைவராகிய அகத்திய முனிவர்கையால், முகந்து உண்ணப்படும் - மொண்டு பருகப்படும், (ஆதலால்) யாம் - நாம், கல்வியால் கடல் அனையம் - கல்விப் பெருமையால் கடலை நிகர்ப்போம். என்னும் என்று கொள்கின்ற, அடல்ஏறு அனையசெருக்கு - வலிமை பொருந்திய ஆண் சிங்கத்தினது செருக்கைப் போலும் செருக்கிலே, ஆழ்த்திவிடல் - (உங்களை) அமிழ்த்திவிடாதீர்கள்.

ஏ இரண்டும் - அசை

எத்துணைப் பெருங் கல்வியுடையாரும், செருக்கடைவராயின் வல்லவரொருவராலே தப்பாது வெல்லப்படுவார் எ - ம்

8. *உள்ளம் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்*
*கொள்ளுங் குணமே குணமென்க - வெள்ளந்*
*தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து*
*விடுத்த லரிதோ விளம்பு.*

ப - ரை: உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்குசினம் - மனத்தைத் தன் வயமாக்கிக் கொண்டு எழுந்து வளர்கின்ற கோபத்தை காத்துக் கொள்ளும் குணமே குணம் என்க - அடக்கிக் கொள்கின்ற குணமே (அருமையாகிய) குணம் என்று அறியக்கடவாய், வெள்ளம் தடுத்தல் அரிதோ - (பெருகிவருகின்ற) வெள்ளத்தைக் (கரைகட்டித்) தடுத்தல் அரியதோ, தடம் கரை பேர்த்து விடுத்தல் அரிதோ - முன் கட்டப்பட்டிருந்த கரையை உடைத்து (அதனுள் அடங்கி இருந்த) வெள்ளத்தைப் புறத்திலே செல்ல விடுத்தல் அரிதோ, விளம்பு - நீ சொல்வாயாக. தான் - அசை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினங்கொள்ளுதல் எளிது சினத்தை அடக்குதல் அரிது, ஆதலின் அரியதைச் செய்தலே பெருமை எ - ம்

*9. மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்*
*வலியோர் தமைத்தா மருவில் - பலியேல்*
*கடவு ளவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே*
*படர்சிறையப் புள்ளரசைப் பார்த்து.*

ப - ரை: பலி ஏல் (அன்பருடைய) பூசையை ஏற்றுக்கொள்ளும், கடவுள் - சிவபெருமானது, அவிர் சடைமேல் கட்செவி விளங்குகின்ற சடையின்மேல் அணியப்பட்டிருக்கின்ற பாம்பானது, படர்சிறை - விரிந்த சிறகினையுடைய, அப்புள்ளரசைப் பார்த்து - அந்தப் பறவைகளுக்கு அரசராகிய கருடனைப் பார்த்து, அஞ்சாது - பயப்படாது (அவ்வாறே) மெலியோர் - வலிமையில்லாதவர், வலிய விரவலரை - வலிமையுடைய பகைவருக்கு, தாம் வலியோர் தமைமருவில் அஞ்சார், தாம் (அவரினும்) வலியோரைச் சேர்ந்தால் பயப்படார். ஏ - அசை.

பகைவர் வலியவராயவிடத்து, அவரினும் வலியவரைச் சேர்ந்தாற் பயமில்லை. எ - ம்

*10. தங்குறைதீர் வள்ளார் தளர்ந்து பிறர்க்குறூம்*
*வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் - திங்கள்*
*கறையிருளை நீக்கக் கருதா துலகில்*
*நிறையிருளை நீக்குமே யின்று.*

ப - ரை: திங்கள் - சந்திரனானவன், கறை இருளை நீக்கக்கருதாது - தனது களங்கமாகிய இருளை நீக்குதற்கு நினையாமல், மேல் நின்று உலகின் நிறை இருளை நீக்கும் - ஆகாயத்திலேநின்று உலகத்துநிறைந்த இருளை நீக்குவான் (அதுபோல) விழுமியோர். மேலோர் தங்குறை தீர்வு உள்ளார் - (தமது) குறை நீங்குதலை நினையாராகி, தளர்ந்து - மனம் இளகி, பிறர்க்கு உறும் - பிறருக்கு உண்டாகிய, வெம்குறை - வெவ்விய குறையை, தீர்க்கிற்பார் - நீக்குவார்.

மேலோர் தங்குறையை நீக்காது பிறர் குறையை நீக்குவார் எ - ம்

*11. பொய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பா லன்றியே*
*மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம் - துப்பிற்*
*சுழற்றுங்கொல் கற்றூணைச் சூறா வளிபோய்ச்*
*சுழற்றுஞ் சிறுபுன் றுரும்பு.*

ப - ரை: சூறாவளிபோய் - சுழற்காற்றானது சென்று (சிறுபுல்) துரும்பு - சிறிய நொய்தலாகிய துரும்பை, சுழற்றும் - (எடுத்துச்) சுழற்றும், துப்பின் - (அதுதன்) வலிமையால், கல்தூணைச் சுழற்றும்கொல் - சுழற்றுமோ - கல்லுக்கம்பத்தை, சுழற்றமாட்டாது (அதுபோல) பொய்ப்புலன்கள் ஐந்தும் - பொய்யாகிய ஐந்து புலன்களும், புல்லியர்பால் அன்றி - புல்லறிவாளரிடத்தல்லாமல், மெய்ப்புலவர் தம்பால் - மெய்யறிவுடையவரிடத்தே, நோய் விளையா - துன்பத்தைச் செய்யமாட்டா.

ஏ - ம் - அசை.

ஐம்புலன்களினாலே மூடரேயன்றி மெய்யறிவுடையவர் துன்பமடையார் எ - ம் புலன்கள் ஐந்தாவன - ஓசை, ஊறு, உருவம், சுவை, நாற்றம் என்பன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. *வருந்து முயிரொன்பான் வாயிலுடம்பிற்*
*பொருந்துத றானே புதுமை - திருந்திழாய்*
*சீதநீர் பொள்ளிற் சிறுகுடத்து நில்லாது*
*வீதலோ நிற்றல் வியப்பு.*

ப - ரை: திருந்து இழாய் - திருந்திய ஆபரணத்தையுடையவளே, சீதநீர் - குளிர்ச்சியாகிய நீரானது. பொள்ளல் சிறுகுடத்து நில்லாது வீதலோ - இல்லியையுடைய சிறிய குடத்திலே நில்லாது. ஒழுகிப்போதலோ (ஆச்சரியம்), நிற்றல் வியப்பு - நிற்றலே ஆச்சரியமாகும் (அதுபோல) வருந்தும் உயிர் - வருந்துகின்ற உயிரானது, ஒன்பான் வாயில் உடம்பில் பொருந்துதலே புதுமை - ஒன்பது துவாரங்களையுடைய உடம்பிலே தங்குதலே ஆச்சரியம். நீங்குதல் ஆச்சரியமன்று.

தான் - அசை

ஒன்பது துவாரங்களையுடைய உடம்பிலே உயிர் நிற்றலுக்கன்றி நீங்குதலுக்கு ஆச்சரியமடைதல் பேதமை எ - ம்

13. *பெருக்க மொடுசுருக்கம் பெற்ற பொருட்கேற்ப*
*விருப்ப மொடுகொடுப்பர் மேலோர் - சுரக்கு*
*மலையளவு நின்றமுலை மாதே! மதியின்*
*கலையளவு நின்ற கதிர்*

ப - ரை: மலை அளவு நின்ற சுரக்கும் முலைமாதே - மலையளவாக நின்ற(பால்) சுரக்கின்ற தனங்களையுடைய பெண்ணே, மதியின் கதிர் கலை அளவு நின்ற - சந்திரனுடைய கிரணங்கள் வளர்தலையும் தேய்தலையும் பொருந்திய கலைகளினளவாக நின்றன (அதுபோல) மேலோர் - பெரியோர், பெருக்கமொடுசுருக்கம் பெற்ற பொருட்கு ஏற்ப - வளர்தலையும் குறைதலையும் பொருந்திய செல்வத்திற்கு இசைய, விருப்பமொடு கொடுப்பர், - அன்போடு கொடுப்பர்.

பெரியோர் தாம் பெற்ற செல்வத்திற்கேற்ப மிகுதியாகவும் குறைவாகவும் கொடுப்பர், ஒன்றும், கொடாதிரார் எ - ம்

14. *தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோமென்று*
*தலையா யவர்செருக்குச் சார்தல் - இலையால்*
*இரைக்கும்வண் டூதுமல ரீர்ங்கோதாய்! மேரு*
*வரைக்கும்வந் தன்று வளைவு.*

ப - ரை: இரைக்கும் வண்டு ஊதும் - ஒலிக்கின்ற வண்டுகள் ஊதுகின்ற, மலர் ஈர்ங்கோதாய் - பூக்களாகிய குளிர்ச்சி பொருந்திய மாலையுடையவளே, மேருவரைக்கும் வளைவுவந்தன்று - (எக்காலத்தில் அசைவற்றிருந்த) மகாமேரு மலைக்கும் (ஒருகாலத்தில்) வளைவுவந்தது, (ஆதலால்) தலையாயவர் - முதன்மையான அறிவுடையவர்கள், தொலையா - அழியாத, பெருஞ் செல்வம் - பெரிய செல்வத்திலே, தோற்றத்தோம் என்று - பிறந்திருக்கின்றோம் என்று, செருக்குச் சார்தல் இலை - செருக்கடைதல் இல்லை. ஆல் - அசை.

எத்துணைப் பெருஞ் செல்வத்துக்கும் அழிவு வருமென்றறிந்து அடங்குவோரே அறிவுடையோர் எ - ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*15.* ***இல்லானுக் கன்பின் இடம்பொரு ளேவன்மற்(று)***
***எல்லா மிருந்தும்அவற் கென்செய்யும் - நல்லாய்***
***மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்***
***விழிலார்க் கேது விளக்கு.***

ப - ரை: நல்லாய் - நற்குணமுடையவளே, மொழி இலார்க்கு முதுநூல் ஏது - பேச்சில்லாதவராகிய ஊமைகளுக்குப் பழைமையாகிய நூல் யாது பயனைச் செய்யும் தெரியும் விழி இலார்க்கு விளக்கு ஏது - பார்க்கின்ற கண்ணில்லாதவராகிய குருடருக்குத் தீபம் யாது பயனைச் செய்யும் (அதுபோல) இங்கு அன்பு இல்லானுக்கு - இவ்வுலகத்தில் அன்பில்லாதவனுக்கு, இடம்பொருள் ஏவல் எல்லாம் இருந்தும், அவற்கு என் செய்யும் - அவனுக்கு யாது பயனைச் செய்யும் (ஒருபயனுஞ்செய்யா), மற்று - அசை

அன்பில்லாதவன், இடம்பொருளேவல்களுடையவனாயினும் அவை கொண்டு அறமும், புகழுஞ் செய்துகொள்ளமாட்டான் எ - ம்.

*16.* ***தம்மையுந் தங்கடலை மையையும் பார்த்துயர்ந்தோர்***
***தம்மை மதியார் தமையடைந்தோர் - தம்மின்***
***இழியினுஞ் செல்வ ரிடர்தீர்ப்ப ரல்கு***
***கழியினுஞ் செல்லாதோ கடல்.***

ப - ரை: கடல் - (பெரிய) கடலானது, அல்கு கழியினும் - (தன்னை அடுத்த) சிறிய உப்பங்கழியிலும், செல்லாதோ - போய்ப் பாயாதோ (போய்ப் பாயும் அதுபோல) உயர்ந்தோர் - (அறிவொழுக்கங்களினால்) உயர்ந்தவர்கள். தமை அடைந்தோர் தம்மின் இழியினும் - தங்களைச் சார்ந்தவர்கள் தங்களைப் பார்க்கிலும் தாழ்ந்தவர்களாயினும், தம்மையும் தங்கள் தலைமையும் பார்த்துத் தம்மை மதியார் - தங்களையும் தங்களுடையதலைமையையும் பார்த்துத் தங்களை மதியாதவர்களாகி, செல்வர் இடர் தீர்ப்பர் - அவர்கள் இருக்கும் இடத்துக்குப் போய் அவர்களுடைய துன்பத்தை நீக்குவார்கள்.

மேலோர் தம்மைச் சார்ந்தவர் தம்மிற்றாழ்ந்தவராயினும் செருக்கின்றி அவரிடம் தேடிச் சென்று பாதுகாப்பர் எ - ம்

*17.* ***எந்தைநல் கூர்ந்தான் இரப்பா தென்றவன்***
***மைந்தர்தம் ஈகை மறுப்பரோ - பைந்தொடீ!***
***நின்று பயனுதவி நில்லா அரம்பையின் கீழ்க்***
***கன்று முதவுங் கனி.***

ப - ரை பைந்தொடீ - பசும்பொன்னாலாகிய வளையல்களை யுடையவளே, எந்தை இரப்பர்க்கு ஈந்து நல்கூர்ந்தான் என்று - எங்கள் பிதா இரப்பவர்க்குக் கொடுத்து வறியவனானான் என்று அவன் மைந்தர் தம் ஈகை மறுப்பரோ - அவனுடைய புதல்வர் தமது ஈகையைக் கைவிடுவரோ, (விடார் எதுபோல் எனின்) நின்று பயன் உதவி நில்லா - (முன்னே அழிவில்லாமல்) நின்று கொண்டு (பழமாகிய பயனைக் கொடுத்து (அதனாலே) அழிவையடைந்த, அரம்பையின் - வாழை மரத்தினது, கீழ்க்கன்றும் - கீழ்நின்றகன்றும், கனி உதவும் - பழத்தைக் கொடுக்கும் (அதுபோல)

தந்தை இரப்பவர்க்கு ஈந்து வறியவனானானென்று அவன் மக்கள் ஈகையைக் கைவிடார் எ - ம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. *இன்சொலாலன்றி இருநீர் வியனுலகம்*
*புன்சொலா லென்றும் மகிழாதே - பொன்செய்*
*ஆதிர்வளையாய் பொங்கா தழற்கதிராற் றண்ணெண்*
*குதிர்வரவாற் பொங்குங் கடல்.*

ப - ரை: பொன்செய் ஆதிர் வரையாய் - பொன்னாலே செய்யப்பட்ட ஒலிக்கின்ற வளையல்களையுடையவளே, கடல் தண் என் கதிர் வரவால் பொங்கும் - கடலானது குளிர்ச்சி பொருந்திய கிரகணங்களையுடைய சந்திரன் வருகையினால் பொங்கும் (அதுவன்றி) அழற்கதிரால் பொங்காது - வெம்மை பொருந்திய கிரகணங்களையுடைய சூரியன் வருகையினால் பொங்காது (அதுபோல) இருநீர் வியன் உலகம் - பெரிய கடல் சூழ்ந்த பரந்த உலகத்திலுள்ளவர்கள், இன்சொல்லால் அன்றி வன் சொல்லால் என்றும் மகிழாது - இன் சொல்லினாலல்லாமற் கடுஞ் சொல்லினால் எந்நாளும் மகிழ்ச்சியடையார்.
ஏ - அசை.

இன் சொல்லினாலல்லாமல் வன்சொல்லினால் ஒருவரும் மகிழ்ச்சியடையார். எ - ம்

19. *நல்லோர் வரவால் நகைமுகங்கொண் டின்புறீர்*
*அல்லோர் வரவான் அழுங்குவார் - வல்லோர்*
*திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா*
*வருந்துஞ் சுழற்கால் வர.*

ப - ரை: தேமா - தேமாமரமானது, தென்றல் வரத் தளிர் காட்டித் திருந்தும் - தென்றல் காற்று தளிரைக்காட்டிச் சிறப்புற்றிருக்கும்: சுழல்கால் வரவருந்தும், சுழல்காற்று வர வருந்தும் (அதுபோல) வல்லோர் - கல்வியறிவில் வல்லவர் நல்லோர் வரவான் முகநகை கொண்டு இன்பு உறீஇ - நல்லவருடைய வருகையினாலே முகமலர்ச்சி கொண்டு இன்பத்தை அடைந்து, அல்லோர் வரவால் அழுங்குவார் - தீயவருடைய வருகையினாலே துன்பத்தை அடைவார்.

கல்வியறிவுடையவருக்கு நல்லோர் வரவினாலே இன்பமும் தீயோர் வரவினாலே துன்பமும் விளையும் எ - ம்.

20. *பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்*
*எரியின் இழுதாவ ரென்க - தெரியிழாய்!*
*மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்*
*கண்டு கலுழுமே கண்.*

ப - ரை: தெரி இழாய் - ஆராய்ந்த ஆபரணத்தையுடையவளே, கண் - கண்கள் மண்டு பிணியினால் வருந்து பிற உறுப்பைக் கண்டு - நெருங்கிய நோயினால் வருந்துகின்ற மற்றைய உறுப்புக்களைப் பார்த்து, கலுழும் - அழும்: (அதுபோல) பெரியவர் - (அறிவொழுக்கங்களிற்) பெரியவர், பிறர் நோய்கண்டு - பிறருக்கு வந்த நோயைக் கண்டு, தம் நோய் போல் உள்ளம் எரியின் இழுது ஆவர். என்க - தமக்கு வந்த நோய்போல் நினைத்து மனம் நெருப்பிலேபட்ட நெய்போல உருகுவார் என்று அறியக்கடவாய், ஆம் - அசை.

பிறருக்கு வருந்துன்பத்தைக் கண்டபோது இரங்குதல் பெரியோருக்கு இயல்பாகும். எ - ம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*21. எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்*
*எழுத்தறிவார்க் காணின் இலையாம் - எழுத்தறிவார்*
*ஆயுங் கடவுள் அவிர்சடைமுன் கண்டளவில்*
*வீயுஞ் சுரநீர் மிகை.*

ப - ரை: சுரநீர் மிகை- ஆகாய கங்கையின் பெருக்கமானது, எழுத்து அறிவார் ஆயும் கடவுள் - எழுத்துக்களினியல்பை அறியும் பெரியோரால் ஆராயப்படும் சிவபெருமானது ஆவிர்சடை முன்கண்ட - விளங்குகின்ற சடையை எதிரே கண்ட அளவில், வீயும் - அடங்கிவிடும்: (அதுபோல) எழுத்து அறியார் கல்விப்பெருக்கம் அனைத்தும் - இலக்கண நூலை அறியாதவருடைய மற்றைக்கல்வியினது பெருக்கம் முழுதும், எழுத்து அறிவார்க்காணின் இலை - இலக்கண நூலை அறிந்தவரைக் கண்டால் இல்லாமற்போகும் ஆம் - அசை.

இலக்கண நூலுணர்ச்சியில்லாதவருடைய கல்வி இலக்கண நூலுணர்ச்சியுடையா ரெதிரே பயன்படாது எ - ம்.

**22. ஆக்கும் அறிவா னலது பிறப்பினால்**
**மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க - நீக்கு**
**பவரார் அரவின் பருமணிகண் டென்றுங்**
**கவரார் கடலின் கடு.**

ப - ரை அரவின் பருமணிகண்டு நீக்குபவர் ஆர் - (நஞ்சையுடைய) பாம்பினிடத்து உண்டாகிய பருத்த மாணிக்கத்தை கண்டு நீக்குவோர் யாவார்: (ஒருவருமில்லை) கடலின் கடு என்றும் கவரார் - பாற்கடலினிடத்து உண்டாகிய நஞ்சை ஒருநாளும் கொள்வாருமில்லை: (ஆதலால்) மீக்கொள் உயர்வு இழிவு - மேலாகக் கொள்கின்ற உயர்வையும் (கீழாகக் கொள்கின்ற) இழிவையும், ஆக்கும் அறிவான் அலது அறிவான் பிறப்பினான் வேண்டற்க - (நற்குணங்களை) உண்டாக்குகின்ற கல்வியறிவினாலல்லாமல் சாதியினாலே விரும்பாதிருக்கக் கடவீர்.

எக்குலத்தினராயினும் அறிவுடையோரை உயர்ந்தவராகவும் அறிவில்லாதோரை இழிந்தவராகவும் கொள்ளல் வேண்டும் எ - ம்.

*23. பகர்ச்சி மடவார் பயிலநோன் பாற்றல்*
*திகழ்ச்சி தருநெஞ்சத் திட்பம் - நெகிழ்ச்சி*
*பெறும் பூரிக் கின்றமுலைப் பேதாய் பலகால்*
*எறும்பூரக் கற்குழியு மே.*

ப - ரை: பூரிக்கின்ற முலைப் பேதாய் - விம்முகின்ற தனங்களையுடைய பெண்ணே, பலகால் எறும்பு ஊரக் கல்குழியும் - பலதரம் சிற்றெறும்புகள் ஊர்ந்துகொண்டு வந்தாலும் கருங்கல்லும் குழிந்துபோகும், (அதுபோல) மடவார் பகர்ச்சி பயில - பெண்களிடத்தில் வாய்ப்பேச்சோடு பழகிக்கொண்டு வந்தாலும், நோன்பு - ஆற்றல் திகழ்ச்சி தரும் நெஞ்சத் திட்பம் நெகிழ்ச்சி பெறும் - தவத்தைச் செய்தலில் விளங்குகின்ற (ஒருவனுடய) மனத்தின் உறுதியானது (நாளுக்கு நாள்) தளர்ந்து போகும். ஏ - அசை.

மாதர்களிடம் பேசிப்பழகுதலால் தவஞ்செய்தற்குரிய மனவுறுதியும் கெட்டுவிடும். எ - ம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. *உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே - வண்டுமலர்ச்
சேர்க்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்புங் கனி.*

ப - ரை: செழும் பொழில்வாய் - செழுமையாகிய சோலையினிடத்தே, மலர்ச் சேர்க்கைவண்டு விரும்பும் - பூவாகிய மெத்தையை வண்டுகள் விரும்பும், வேம்பு அன்றோ காக்கை விரும்பும் கனி - வேப்பம்பழமன்றோ காக்கைகள் விரும்பும் பழம். (அதுபோல) இங்கு ஒருவர்க்குக் குணம் உண்டு, எனினும் - இவ்வுலகத்தில் ஒருவருக்கு நற்குணம் உள்ளதாயினும், கீழ்கொண்டு புகல்வது அவர் குற்றமே - கீழோர் எடுத்துப் பேசுவது அவருடைய குற்றமேயாகும்.

ஒருவனிடத்திலுள்ள நற்குணத்தையே மேலோர் எடுத்துப் பேசுவர்: தீக்குணத்தையே கீழோர் எடுத்துப் பேசுவார் எ - ம்.

25. *கல்லா அறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகனம் நண்ணாரே - வில்லார்
கணையிற் பொலியுங் கருங்கண்ணாய் நொய்தாம்
புணையிற் புகுமொண் பொருள்.*

ப - ரை: வில் ஆர் கணையின் பொலியும் - கருங்கண்ணாய் வில்லோடு கூடிய அம்பைப்போலப் (புருவத்தோடுகூடி) விளங்குகின்ற கருமையாகிய கண்களையுடையவளே, புணையில் புகும் ஒள்பொருள் நொய்து ஆம் - (கனமில்லாத) தெப்பத்திலே சேர்ந்த கனமுடைய பொருள் இலகுவாம். (அதுபோல) கல்லா அறிவின் கயவர்பால் - கல்லாத அறிவினையுடைய மூடரிடத்திலே (சேர்ந்தால்) கற்று உயர்ந்த நல்லார் தமது கனம் நண்ணார் - கற்றறிந்த நல்லோர் தமது பெருமையை இழப்பர்.

கற்றறிந்தவர் மூடரிடத்தே சென்றால் தமது பெருமை இழப்பர் எ - ம்.

26. *உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார் - மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றோ விளம்பு.*

ப - ரை: மடவரால் - இளமை பொருந்திய பெண்ணே, ஒள்புலவர் உடலின் சிறுமை கண்டு - ஒள்ளிய புலவருடைய உடலின் சிறுமையைக்கண்டு, கல்விக்கடலின் பெருமை கடவார் - (அவரது) கல்வியாகிய கடலின் பெருமையை (ஒருவரும்) கடக்கமாட்டார், கதிர்காணும் ஒளி - சூரியனுடைய ஒளியோடு கூடிக் காண்கின்ற கருமணி யொளியானது, கண் அளவு ஆய் நின்றதோ (தனக்கு இடமாகிய சிறிய) கண்ணின் அளவாய அடங்கி நின்றதோ, விண் அளவு ஆயிற்றோ விளம்பு - (தான் காண்கின்ற பெரிய) ஆகாயத்தினளவாக வியாபித்து நின்றதோ நீ சொல்லுவாயாக. தான் - அசை

உருவத்தாற் சிறியவரும் அறிவினாற் பெரியவராயிருப்பர் எ - ம்.

27 *கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தம்மால் இயலுதவி தாஞ்செய்வர் - அம்மா*
*முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு*
*விளைக்கும் வலியனதாம் மென்று.*

ப - ரை. முளைக்கும் எயிறு - முளைக்கின்ற பற்களானவை, நாவிற்கு - (தமக்கு ஒருபகாரமுஞ் செய்தற்கு இயலாத) நாக்குக்கு வலியான தாம் மென்று முதிர்சுவை விளைக்கும் - கடினமாகிய தின்பண்டங்களைத் தாமேமென்று கொடுத்து நிறைந்தசுவையை உண்டாக்கும். (அதுபோல) கற்று அறிந்தோர் - கற்றறிந்தவர் கைமாறு உகவாமல் - பிரதியுபகாரத்தை விரும்பாமல், மெய்வருந்தித் தம்மால் இயல்உதவி தாம் செய்வர் - சரீரம் வருந்தித் தம்மால் இயன்ற உதவிகளைத் தாமே செய்வர்.
அம்மா - வியப்பிடைச்சொல்

அறிவுடையவர் கைம்மாறு வேண்டாமலே பிறருக்குத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்பவர் எ - ம்

*28. முனிவினும் நல்குவர் மூதறிஞ ருள்ளக்*
*கனிவனும் நல்கார் கயவர் - நனிவிளைவில்*
*காயினு மாகும் கதலிதா னெட்டிபழுத்*
*தாயினும் ஆமோ அறை.*

ப - ரை: மூதறிஞர் முனிவினும் நல்குவர் - பேரறிவுடையவர் கோபமுள்ள காலத்திலும் கொடுப்பர். கயவர் உள்ளக் கனிவிலும் நல்கார் - மூடர் மனமகிழ்ச்சிஉள்ள காலத்திலும் கொடார், கதலி நனி விளைவு இல்காயினும் ஆகும் - வாழையானது மிக முற்றுதலில்லாத காயினாலும் பயன்படும்,எட்டிப்பழுத்து ஆயினும் ஆமோ அறை-எட்டியானது பழுத்தாலும் பயன்படுமோ நீ சொல்வாயாக. தான் - அசை.

அறிவுடையார் கோபத்தினும் கொடுப்பர், மூடர் மகிழ்ச்சியினும் கொடார் எ - ம்.

*29. உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோர்*
*அடுக்கும் ஒருகோடி யாக - நடுக்கமுறார்*
*பண்ணிற் புகலும் பனிமொழியாய் அஞ்சுமோ*
*தண்ணிற் புலியைமதி மான்.*

ப - ரை: பண்ணின் புகலும் பனிமொழியாய் - பண்ணைப் போலப் பேசுகின்ற குளிர்ச்சிபொருந்திய சொல்லையுடையவளே, மதிமான் - சந்திரனிடத்திலிருக்கிறமானானது மண்ணில் புலியை அஞ்சுமோ - பூமியில் இருக்கிற புலிகளுக்குப் பயன்படுமோ, (பயப்படாது அதுபோல) நெஞ்சு ஓங்கு பரத்து உற்றோர் - (தம்முடைய) மனம் உயர்ந்த பரம்பொருளினிடத்தே அழுந்தப் பெற்ற ஞானிகள், உடம்புக்கு வரும் துன்பங்கள் அடுக்கிச் சொல்லப்படும் ஒரு கோடியளவினவாக இருந்தாலும், நடுக்கமுறார் - அச்சமடையார்.

கடவுளிடத்து மனம் அழுந்தப் பெற்றவர் எத்துணைப் பெருந் துன்பங்களுக்கும் அஞ்சார் எ - ம்.

*30. கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்முன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உள்ளங்கனிந்தறஞ் செய்துய்கவே - வெள்ளம்*
*வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்*
*பெருகுதற்கண் என்செய்வார் பேசு*

ப - ரை: கொள்ளுங் கொடுங்கூற்றம் கொல்வான் குறுகுதல் முன் - (உயிரைக்) கொண்டு செல்கின்ற கொடுமையாகிய யமனானவன் கொல்லும்படி அணுகுவதற்கு முன்னே, உள்ளம் கனிந்து அறம்செய்து உய்க - மனங்கரைந்து தருமங்களைச் செய்து பிழைக்க கடவாய்: வெள்ளம் வருவதற்கு முன்னர் அணைகோலிவையார் - வெள்ளம் வருவதற்கு முன்னே கரையைக் கட்டிவையாதவர், பெருகுதற்கண் என்செய்வார் பேசு - (அது) பெருகிவரும்பொழுது யாது செய்வார், நீ சொல்வாயாக, ஏ - அசை.

இறப்பு வருமுன்னே அறத்தை விரைந்து செய்தல் வேண்டும். எ - ம்.

31. *பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே*
*வீரமொடு காக்க விரைகுவர் - நேரிழாய்*
*மெய்சென்று தாங்கும் வியன்கோல் அடிதன்மேற்*
*கைசென்று தாங்கும் கடிது.*

ப - ரை: நேர்இழாய் - தகுதியாகிய ஆபரணத்தையுடையவளே! மெய் சென்று தாக்கும் வியன்கோல் அடி - உடம்பிலே போய்த் தாக்குகின்ற பெரிய கோலினுடைய அடியை, கை கடிது சென்று தன்மேல் தாங்கும் - கை விரைந்து போய்த் தன்மேல் ஏற்றுக் கொள்ளும் : (அதுபோல) பேர் அறிஞர் - பெரிய அறிவுடையவர், தாங்கும் பிறர் துயரம் வீரமொடு தாங்கி - வருந்துகின்ற பிறருடைய துன்பத்தை வீரத்தோடு தாம் ஏற்றுக் கொண்டு, காக்க விரைகுவார் - (அவரைப்) பாதுகாப்பதற்கு முற்படுவர். ஏ - அசை.
பேரறிவுடையோர் பிறருக்கு வருந் துன்பத்தை விரைந்து நீக்குவர் எ - ம்.

32. *பன்னும் பனுவற் பயன்றே ரறிவிலார்*
*மன்னும் அறங்கள் வலியிலவே - நன்னுதால்*
*காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ*
*தாழொன் றிலதாயிற் றான்.*

ப - ரை: நல்நுதால் - நல்லநெற்றியையுடையவளே, - காழ் ஒன்று உயர்திண் கதவு - வயிரம் பொருந்திய உயர்ந்த வலிய கதவானது தாழ் ஒன்று இலது ஆயின் வலி உடைத்தோ - ஒரு தாழ் இல்லாதாயின் உறுதியை உடைத்தாகுமோ, (உடைத்தாகாது) அதுபோல, பன்னும் பனுவல் பயந்தோர் அறிவு இலார் - சொல்லப்படுகின்ற நூல்களினது பொருளை அறியும் விவேகமில்லாதவர் செய்யும், மன்னும் அறங்கள் வலி இலவே - மிகுந்த தருமங்கள் உறுதியில்லாதனவேயாம். தான் - அசை.

விதிவிலக்குகளைப் பகுத்தறியும் அறிவில்லாதவர் செய்யுந் தருமங்கள் பயன்படா. எ - ம்.

33. **எள்ளா திருப்ப இழிஞர்போற் றற்குரியர்**
**விள்ளா அறிஞரது வேண்டாரே - தள்ளாக்**
**கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்**
**கரைகாப் புளதோ கடல்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப- ரை: நீர் கட்டு குளம் தள்ளாக் கரை காப்பு உளது - நீரைக் கட்டிவைக்கின்ற (சிறிய) குளமே தள்ளப்படாத கரை காவலாக உள்ளது: அன்றிக் கடல்கரை காப்பு உள்ளதோ - அது வல்லாமற் (பெரிய) கடலானது கரைகாவலாக உள்ளதோ (உள்ளதன்று: அதுபோல) இழிஞர் எள்ளாது இருப்பப் போற்றற்கு உரியர் - அறிவில்லா சிறியோர் (தம்மைப்பிறர்) இகழாதிருக்கும்படி காக்கப்படுதற்கு உரியவராவர். விள்ளா அறிஞர் அது வேண்டார் - நீங்காத அறிவுடைய பெரியோர் அங்ஙனங்காக்கப்படுதல் வேண்டார். ஏ - அசை.

பிறர் இகழாவண்ணங் காக்கப்படுதல் சிறியோருக்கன்றிப் பெரியோருக்கு வேண்டுவதில்லை. எ - ம்

*34.* *அறிவுடையா ரன்றி அதுபெறார் தம்பாற்*
*செறிபழியை அஞ்சார் சிறிதும் - பிறைநுதால்*
*வண்ணஞ் செய்வாள் விழியே அன்றிமறைகுருட்டுக்*
*கண்ணஞ்சு மோஇருளைக் கண்டு.*

ப - ரை: பிறை நுதால் - பிறைபோலும் நெற்றியையுடையவளே! வண்ணம் செய் வாள்விழியே யன்றி - அழகுசெய்கின்ற ஒளியையுடைய கண்களேயல்லாமல், மறைகுருட்டுக் கண் - ஒளிமறைந்த குருட்டுக் கண்களானவை, இருளைக் கண்டு அஞ்சுமோ இருட்டைக்கண்டு அஞ்சுமோ (அஞ்சாது : அதுபோல) அறிவுடையார் அன்றி - அறிவுடையவரேயல்லாமல், அது பெறார் - அவ்வறிவைப் பெறாத மூடர் தம்பால் செறிபழியைச் சிறிதும் அஞ்சார் - தம்மிடத்து நெருங்கிவரும் பழியைச் சிறிதும் அஞ்சார்.

அறிவுடையோர் பழிக்கு அஞ்சுவர்: மூடர் அஞ்சார் எ - ம்.

*35.* *கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்*
*மற்றயர்தாம் என்றும் மதியாரே - வெற்றிநெடும்*
*வேல்வேண்டும் வாள் விழியாய்! வேண்டா புளிங்காடி*
*பால்வேண்டும் வாழைப்பழம்*

ப - ரை: வெற்றிநெடும் வேல் வேண்டும் வாள் விழியாய் - வெற்றியையுடைய நெடிய வேற்படை விரும்புகின்ற ஒளிபொருந்திய கண்களையுடையவளே! வாழைப்பழம் பால் வேண்டும் - வாழைப்பழத்தை (தித்திப்பாகிய) பாலானது அவாவும், புளிங்காடி வேண்டா - புளிப்பாகிய காடிநீரானது (அதனை) அவாவாது, (அதுபோல) கற்ற அறிவினரை மேன்மக்கள் காமுறுவர் - (நூல்களைக்) கற்ற அறிவுடையவரைமேலோர் விரும்புவர், மற்றையர் என்றும் மதியார் - கீழோர் (அவரை) எப்போதும் மதியார், தாம். ஏ - அசை.

கல்வி அறிவுடையவரை மேன்மக்களே விரும்புவர்: கீழ்மக்கள் விரும்பார் எ - ம்.

*36.* *தக்கார்க்கே ஈவர் தகார்க்களிப்பா ரில்லென்று*
*மிக்கார்க் குதவார் விழுமியோர் - எக்காலும்*
*நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமளி*
*புல்லுக் கிறைப்பரோ போய்.*

ப - ரை: எக்காலும் நீர் நெல்லுக்கு இறைப்பதே அன்றி - எக்காலத்தும் நீரை நெற்பயிருக்கே இறைப்பதல்லாமல் காட்டு முளி புல்லுக்குப்போய் இறைப்பரோ, காட்டினிடத்தே உலரும் புல்லுக்குப்போய் இறைப்பரோ (இறையார்: அதுபோல) தக்கார்க்கே, ஈவர் தகார்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிப்பார் இல் என்று - தகுதியுடையவருக்கே கொடுப்பார் தகுதியற்றவருக்குக் கொடுப்பவர் இல்லையென்று அறிந்து, விழுமியோர் - மேலோர், மிக்கார்க்கு உதவார் - நன்னெறி கடந்தவர்க்குக் கொடார்.

மேலோர் தகுதியுடையவருக்கன்றித் தகுதியில்லாதவருக்குக் கொடார் எ- ம்.

37. *பெரியாற்முற் றன்னைப் புனைற்துரைத்த பேதை*
*தவியா துயர்வகன்று தாழும் - தெரியயெ்கொல்*
*பொன்னுயர்வு தீர்த்த புணர்முலையாய்! விந்தமலை*
*தன்னுயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து*

ப - ரை: பொான் உயர்வு தீர்த்த புணர் முலையாய் - இலக்குமியுடைய உயர்வை (அழகினாலே) நீக்கிய நெருங்கிய தனங்களையுடையவளே, பெரியோர்முன் தன்னைப் புனைந்து உரைத்த பேதை - பெரியோர் முன்னே தன்னைச் சிறப்பித்துச் சொல்லியமூடன், உயர்வு தரியாது அகன்று தாழும் - உயர்வைப் பொறுக்கமாட்டாது இழந்து தாழ்வையடைவன், விந்தமலை தாழ்ந்து தன் உயர்வு தீர்ந்தன்று - (அகத்திய முனிவர் முன்னே தன்னைச் சிறப்பித்துச்சொல்லிய) விந்தமலையானது (அவர் கையினாலே ஊன்றப்பாதாளத்திலே) தாழ்ந்து தன்னுடைய உயர்வு நீங்கியது: தெரியாய்கொல் - (நீ அதனை) அறியாயோ?

பெரியாரெதிரே தன்னைப் புகழ்ந்துரைத்தவன் தாழ்வையடைவன் எ - ம்.

38. *நல்லார் செய்யுங்கேண்மை நாடோறும் நன்றாகும்*
*அல்லார் செய்யுங்கேண்மை யாகாதே - நல்லாய்கேள்*
*காய்முற்றின் தின்தீன் கனியாம் இளந்தளிர்நாள்*
*போய்முற்றின் என்னாகிப் போம்.*

ப - ரை: நல்லாய் கேள் - நற்குணத்தையுடையவளே கேட்பாயாக, காய்முற்றின் தின்தீன்கனி ஆம் - காயானது (நாள்சென்று) முற்றினால் தின்னுதற்குரிய இனிய கனியாகும். இளம் தளிர் நாள்போய் முற்றின் என் ஆகிப்போம் - இளந்தளிரானது நாள் சென்று முற்றினால்யாதாகிப் போகும் (அதுபோல) நல்லார் செய்யும் கேண்மை நாடோறும் நன்று ஆகும் - நல்லோர் செய்யும் நட்பானது நாடோறும் நன்றாகிவளரும், அல்லார் செய்யும் கேண்மை ஆகாது - அல்லார் செய்யும் நட்பானது நல்லதாகாது.

நல்லோர் நட்பு நாள் செல்லச்செல்ல இனிதாகும்: தீயோர் நட்பு அங்ஙனமாகாது கெடும் எ- ம்.

39. *கற்றறியார் செய்யுங் கடுநட்புந் தாங்கூடி*
*உற்றுழியுந் தீமை நிகழ்வுள்ளதே - பொற்றொடீ!*
*சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த*
*அன்றே மணமுடைய தாம்.*

ப - ரை. பொற்றொடீ - பொன்னாலாகிய வளையல்களையுடையவளே, சென்று படர்ந்த செழுங்கொடி மென்பூ - போய்ப்படர்ந்த செழுமையாகிய கொடியின் மெல்லிய பூவானது மலர்ந்த அன்றே மணமுடையது ஆம் - மலர்ந்த அன்றைக்கே மணம் உடையதாகிப் பின் கெட்டுவிடும் : (அதுபோலக்) கற்று அறியார் செய்யும் கடு நட்பும் - கற்றறியாதவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்ற மிருதியாகிய நட்பும், தாம் கூடி உற்ற உழியும் - நெடுங்காலம்) தாங்கள் கூடியிருந்தவிடத்தும், தீமை நிகழ்வே உள்ளது - தீங்கு விளைதலே உள்ளதாகும்.

மூடருடைய நட்புத் தொடக்கத்திலே நன்றாயிருக்கும், பின்பு தீங்கு விளைவிக்கும் எ - ம்.

40. *பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி*
*மன்னும் அறிஞரைத்தாம் மற்றொவ்வார் - மின்னுமணி*
*பூணும் பிறவுறுப்புப் பொன்னே அதுபுனையாக்*
*காணுங்கண் ஒக்குமோ காண்.*

ப - ரை: பொன்னே - இலக்குமியைப் போன்றவளே, மின்னும் அணி பூணும் பிற உறுப்பு - விளங்குகின்ற ஆபரணத்தை அணிந்து கொள்கின்ற (கை கால் முதலிய) மற்றைய அவயவங்களானவை, அது புனையாக் காணும் கண் ஒக்குமோ - அதனை அணியாத பார்க்கின்ற கண்களுக்கு ஒப்பாகுமோ ஒப்பாகா (அதுபோல) பொன் அணியும் அரசர் - பொன் ஆபரணங்களாலே அலங்கரித்துக் கொள்ளும் அரசர்கள், புனையாப் பெருங் கல்வி மன்னும் அறிஞரை ஒவ்வார் - (அதனை) அணியாத பெரிய கல்விப் பொருள் நிலைபெற்ற விவேகிகளுக்கு ஒப்பாகார். தாம் மற்று, அசை காண் - முன்னிலையசை.

புலவர்களுக்கு அரசர்களும் ஒப்பாகார். எ - ம்.

**நன்னெறி**
**மூலமும் உரையும்**
**முற்றுப்பெற்றது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பிரத்யங்கிரா தேவி யார்?

ஸ்ரீ பிரத்தியங்கரா தேவி யார்? ஏன் பிரத்தியங்கிரா தேவியை வழிபட வேண்டும்? கொடூர ரூபத்தை உடைய இந்த தெய்வத்தை வணங்குவதால் என்ன நன்மை ஏற்படும்? இதுபோன்ற கேள்விகள் எழலாம். கொடூர ரூபம், சிம்ம முகம், சிம்ம உடல், சிம்ம வாகனம், ஆயிரம் தலைகள், கபால மாலை, கோரைப்பற்கள், வெளியே நீண்ட சிவப்பு நாக்குகள். இதென்ன இப்படி ஒரு விசித்திரமான ஸ்வரூபம் இந்த அம்பிகைக்கு! அப்படி என்னதான் இந்த அம்மன் அருள் புரிகிறாள் என்றெல்லாம் நினைக்கத் தோன்றும்.

எல்லாம் வல்ல பராசக்தி லலிதா திரிபுர சுந்தரியை உபாசனை செய்து விட்டு, பிரத்தியங்கிரா தேவியை ஏன் தனியாக உபாசனை செய்ய வேண்டும்? பிரத்தியங்கிரா உபாசனை அவசியம்தானா? இப்படியும் எண்ணத் தோன்றலாம்.

இப்போதுள்ள சூழ்நிலையில் பிரத்தியங்கிரா உபாசனை அவசியமே! லலிதா திரிபுரசுந்தரியை வழிபாடு செய்யாமல், பிரத்தியங்கிராவை தனியாக உபாசனை செய்யக் கூடாது. பிரத்தியஙகிரா உபாசனை செய்ய தனித்தகுதியும், மனதிடம் மிக மிக அவசியம். லலிதா திரிபுரசுந்தரியை ஆராதனம் செய்தாலே போதும். பிரத்தியங்கிரா தேவியும் நமக்குத் தெரியாமலே நம்மைக் காக்கிறாள். காப்புக் கடவுளாக இருக்கிறாள். நம் பின்னால் தொடர்ந்து வந்து தீய சக்தியை அகற்றுகிறாள்.

விரோதிகளிடமிருந்து தப்பிக்க வாழ்வில் சீரான வளம் பெருக குரோதமுட்கள் அகல, தீய சக்திகள் அழிய வஞ்சத்தை அகப்புறப்படுத்த எந்த செய்வினையும் நம்மை பாதிக்காமலிருக்க எதிலும் பயமில்லாமலிருக்க பிரத்தியங்கிரா உபாசனை தேவை.

பில்லி, சூனியம், செய்வினைக் கோளாறுகள் நீங்க, தடைப்பட்ட நன்மைகள் நடக்க மன அமைதி கிடைக்க மகிழ்ச்சி பெருக இத்தேவியின் கருணை தேவை.

பகைவர்களின் தொல்லைகள் நீங்க ஐஸ்வர்யம் பொங்க நோய் நொடிகள் தாக்காமல் இருக்க, துர்தேவதைகளிடமிருந்து நம்மை காப்பாற்றக் கொள்ள பிரத்தியங்கிரா உபாசனை அவசியம் தேவை.

இந்தப் பிரத்தியங்கிரா உபாசனை மிகவும் கடுமையானது என்பதால் அதனை ரகசியமாகவே செய்து வந்தனர் நம் சான்றோர்கள் .ஏனெனில் மனப்பக்குவம் எல்லோரிடமும் இருப்பதில்லை. உபாசனையைத் தவறான வழியில் பயன்படுத்தி விடுவார்கள் என்ற பயத்தினால் நல்ல உள்ளமும், மிதமான போக்கும் கொண்டவர்களிடமே அதை உபதேசிப்பார்கள்.

பிரத்தியங்கிராதேவியின் அருளைத்தாங்க நமக்கு சக்தி தேவை. மனத்திடமே இந்த சக்தியாகும். முதலில் மனத்திடத்தைக் கொடுத்தே, பின் அருளைத் தருகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NET PRINTERS: 020 8265 0219